# இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான ஐந்தாவது மீளாய்வு குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதியம் எட்டுகின்றது

2025 ஒத்தோபர் 9

நாடொன்றிற்கான விஜயமொன்றின் பின்னரான பூர்வாங்கக் கண்டறிகைகளைத் தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் குழுக்களின் அறிக்கைகளைப் பணிக்குழு விஜயத்தின் பின்னரான ஊடக அறிக்கைகள் உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களாவதுடன் அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை.

- பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஐந்தாவது மீளாய்வினை நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் எட்டியுள்ளனர். மீளாய்வானது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவுடன் நிதியிடலில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 347 மில்லியன் தொகைக்கான அணுகலினை இலங்கை கொண்டிருக்கும்.

- பணவீக்கமானது இலக்கினை நோக்கி முன்னேற்றமடைதல், ஒதுக்குகள் திரட்சியடைதல் மற்றும் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் அரசிறைத் திரட்சி என்பன எதிர்பார்ப்புக்களிலும் பார்க்க சிறப்பாகச் செயற்படுவதனால் இலங்கையின் அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புக்கள் மீட்சிக்குத் தொடர்ந்து ஆதரவளித்துள்ளன. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செயலாற்றமானது வலுவாகக் காணப்படுகின்றது.

- பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தல், மீட்சியினை நிலைநிறுத்துதல் மற்றும் நிச்சயமற்ற உலகளாவிய சூழலொன்றிற்கு மத்தியில் வெளிநாட்டு அதிர்வுகளைச் சிறப்பாக எதிர்கொள்வதற்கு இலங்கையைத் தயார்படுத்தல் என்பவற்றிற்குச் சீர்திருத்தங்களை முன்னேற்றுதலானது முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

**இலங்கை, கொழும்பு:** திரு. இவான் பப்பாஜீயோர்ஜியு தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியப் பணிக்குழுவொன்று அண்மைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் குறித்துக் கலந்துரையாடுவதற்காக 2025 செத்தெம்பர் 24 தொடக்கம் ஒத்தோபர் 9 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தது. விஜயத்தின் நிறைவில் திரு. பப்பாஜீயோர்ஜியு பின்வரும் அறிக்கையினை வெளியிட்டார்:

"4 ஆண்டு கால விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான ஐந்தாவது மீளாய்வு குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கையின் அதிகாரிகளும் எட்டியுள்ளனர். சிஎஉ 2.3 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்தத் தொகையொன்றினைக் கொண்ட ஏற்பாடானது பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையினால் 2023 மாச்சு 20 அன்று ஒப்புதலளிக்கப்பட்டது.

"அலுவலர் மட்ட உடன்படிக்கையானது பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபை ஒப்புதலுக்குட்பட்டதாகக் காணப்படுவதுடன், இது (i) நிகழ்ச்சித்திட்ட பிரமாணங்களுடன் இசைந்து செல்லும் விதத்திலான 2026இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பாராளுமன்ற ஒப்புதல் மற்றும் (ii) பல்புடைப் பங்காளர்களின் நிதியிடல் பங்களிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கும் படுகடன் மறுசீரமைப்புடனான போதியளவிலான முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்குமான நிதியிடல் உத்தரவாத மீளாய்வின் நிறைவு என்பவற்றில் தங்கியுள்ளது.

"நிறைவேற்றுச் சபை மீளாய்வின் நிறைவினையடுத்து, இலங்கை சிஎஉ 254 மில்லியன் தொகைக்கான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 347 மில்லியன்) அணுகலினைக் கொண்டிருக்குமென்பதுடன் இது, ஏற்பாட்டின் கீழ்

பன்னாட்டு நாணய நிதியத்தின் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சிஎஉ 1,524 மில்லியனிற்குக் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.04 பில்லியன்) கொண்டுவரும்.

"இலங்கையின் பேராவல்மிக்க சீர்திருத்த நிகழ்ச்சிநிரலானது பாராட்டத்தக்க பெறுபேறுகளைத் தொடர்ந்து விளைவிக்கின்றது. பொருளாதாரமானது 2025இன் முதலாவது அரையாண்டில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 4.8 சதவீதமளவினால் வளர்ச்சியடைந்ததுடன் வளர்ச்சியானது 2025இல் தொடர்ந்தும் உறுதியாகக் காணப்படுமென நாம் எதிர்பார்க்கின்றோம். பணவீக்கமானது நேர்க்கணிய வீச்சிற்குத் திரும்பலடைந்துள்ளதுடன் விலைகள் செத்தெம்பரில் 1.5 சதவீதமளவினால் ஆண்டிற்காண்டு உயர்வடைந்தன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2025 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியன் தொகையினை எட்டின. மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான வரிகளினால் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டு, 2025இன் முதலாம் அரையாண்டில் இறைச் செயலாற்றமானது வலுவாகக் காணப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்பானது நிறைவடையும் தருவாயில் காணப்படுகின்றது.

"சிறந்த இறை வருவாய்ப் பெறுபேறுகள் மற்றும் வெளிநாட்டுத் தாக்குப்பிடிக்கும் தன்மையில் மேம்பாடுகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு, நிகழ்ச்சித்திட்ட செயலாற்றம் வலுவாகக் காணப்படுகின்றது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாத்து, அதிர்வுகளுக்கு இலங்கையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கு மறுசீரமைப்பு உத்வேகம் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும். விடாப்பிடியான வர்த்தகக் கொள்கையின் நிச்சயமற்றன்மை அத்துடன் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றிலிருந்து பொருளாதாரத்திற்கான தீவிரமடைந்துள்ள கீழ்நோக்கிய இடர்நேர்வுகளைக் கருத்திற்கொள்கையில் இது குறிப்பாக முக்கியத்துவமிக்கதாக விளங்குகின்றது.

"2026 வரவுசெலவுத் திட்டமானது வலுவான வருவாய் வழிமுறைகள் மற்றும் முன்மதிமிக்க செலவிடல் ஒதுக்கீடுகள் என்பவற்றின் பின்னணியில் அரசிறை ஏற்பாட்டைத் தொடர்ந்தும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்ட வழியலகுகளுடன் ஒத்திசைவாக இருக்க வேண்டும். வரி இணக்கத்தினை மேம்படுத்தல், வரித் தளத்தை விரிவுபடுத்தல், வரி விலக்குக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதன் மூலம் வருவாய்க் கசிவுகளைக் கையாளுதல் என்பவற்றுக்கான உறுதியான முயற்சிகளை இது வேண்டுகின்றது. ஒதுக்கீட்டின் கீழ் மூலதனச் செலவிடலுக்குத் தீர்வுகாணுதல் மூலமானவை உள்ளடங்கலாக மேம்படுத்தப்பட்ட அரச நிதி முகாமைத்துவம், செலவின நிலுவைகள் மீளத்தோன்றுவதைத் தவிர்த்தல் அத்துடன் உயர்தரமிக்க மற்றும் வினைத்திறனுடனான பொதுச் செலவினத்தை ஊக்குவித்தல் என்பன அரசிறை ஒழுக்கத்தையும் வெளிப்படைத்தன்மையையும் பாதுகாப்பதில் பங்களிக்கும்.

"அதேவேளை, செலவுப் பிரதிபலிப்பு வலு விலையிடலைப் பேணுதல், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஆளுகையினை வலுப்படுத்தல் மற்றும் நிதியியல் நிலைபெறுதன்மையை உறுதிசெய்வதற்கான அவற்றின் மரபுவழியாகவரும் படுகடன்களைத் தீர்த்தல் மற்றும் அரசிறை இடர்நேர்வுகளைக் குறைத்தல் என்பவையும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அரசாங்க – தனியார் பங்குடமைகள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், அரசாங்கப் பெறுகை மற்றும் அரச சொத்து முகாமைத்துவம் என்பன மீது வரவிருக்கும் சட்டமூலங்கள் பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்துடனும் சிறந்த நடத்தைகளுடனும் ஒத்திசைவானதாக இருக்க வேண்டும்.

"வறியவர்களையும் பாதிக்கப்படத்தக்கவர்களையும் பாதுகாப்பது முன்னுரிமையொன்றாக விளங்க வேண்டும். சமூகச் செலவிடலின் இலக்கிடல், போதுமான தன்மை மற்றும் உள்ளடக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு நலனோம்புகை நலக்கொடுப்பனவுத் திட்டங்களின் வடிவமைப்பை வலுப்படுத்துவதற்கான நோக்கெல்லையொன்று காணப்படுகின்றது.

"எஞ்சியிருக்கின்ற அலுவல்சார் மற்றும் வர்த்தகக் கடன்கொடுநர்களுடனான இருதரப்பு படுகடன் உடன்படிக்கைகளின் இறுதிப்படுத்தலைத் துரிதப்படுத்துதலானது படுகடன் நிலைபெறுதன்மையினை மீளமைத்துக்கொள்வதற்கும் முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் முக்கியமானதாக விளங்குகின்றது. பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தைத் துரிதமாக இயங்கச்செய்தல் முன்மதிமிக்க படுகடன் முகாமைத்துவ நடத்தைகளை நோக்கிய முக்கிய படிமுறையொன்றாக அமைந்திருக்கும்.

"நாணயக் கொள்கையானது தரவுகளால் இயக்கப்பட்டதாகவிருப்பதும் விலை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதும் முக்கியமானதாகும். வரவுசெலவுத் திட்டத்திற்கு நாணய நிதியிடலிலிருந்து தொடர்ந்தும் தவிர்ந்துகொள்ளல் உள்ளடங்கலாக மத்திய வங்கிச் சுயாதீனம் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். ஒதுக்கு போதுமான மட்டங்களுக்குத் திரட்டப்படுவதன் ஊடாக வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை

மீளக்கட்டியெழுப்புகின்ற அதேவேளை செலாவணி வீத நெகிழ்ச்சிவாய்ந்த தன்மைக்கு இடமளிப்பதற்குத் தொடர்ந்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். செயலாற்றமற்ற கடன்களுக்குத் தீர்வுகாணுதல், அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் ஆளுகையையும் மேற்பார்வையையும் வலுப்படுத்தல் மற்றும் கடன்தீராற்றலற்ற தன்மை மற்றும் தீர்மானக் கட்டமைப்புக்கள் என்பவற்றை மேம்படுத்துதல் என்பன கொடுகடன் வளர்ச்சியைப் பேணி வளர்ப்பதற்கும் நிதியியல் துறை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

''அரசாங்கத்தின் நடவடிக்கைத் திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட ஆளுகை மறுசீரமைப்புக்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்தலானது மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது. சொத்துப் பிரகடனங்களை டிஜிட்டல் மயப்படுத்தி இலத்திரனியல் நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலாக பெறுகை மறுசீரமைப்புக்களை முன்னேற்றுதல், பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பை வலுப்படுத்தல், வருவாய் நிர்வாகத்தில் ஊழலுக்கெதிரான வழிமுறைகளை முன்னுரிமைப்படுத்தல் என்பன ஊழல் ரீதியாக பாதிக்கப்படும் தன்மைகளைக் குறைப்பதற்குப் பங்களிக்கும். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆட்சேர்ப்பு துரிதப்படுத்தப்பட்டு ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்கமைவாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையின் உள்ளார்ந்த வளர்ச்சியினை உயர்த்துவதற்குக் கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்புக்களும் முக்கியமானவையாக அமைந்திருக்கும்.

''பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுவானது, சனாதிபதியும் நிதியமைச்சருமான அதிமேதகு அநுர குமார திசாநாயக்க, கௌரவ பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, கௌரவ தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பர்னாந்து, கௌரவ கைத்தொழில் அமைச்சர் திரு. சுனில் ஹந்துன்னெத்தி, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரிக்கான செயலாளர் முனைவர் ஹர்ஷன சூரியப்பெரும, சனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் திரு. துமிந்த ஹுலங்கமுவ, டிஜிட்டல் பொருளாதாரம் மீதான சனாதிபதிக்கான பிரதம ஆலோசகர் முனைவர் ஹான்ஸ் விஜயசூரிய மற்றும் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபயகோன் மற்றும் ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தது.

''மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கான விஜயம் உள்ளடங்கலாக, இவ்விஜயத்தின் போது வழங்கப்பட்ட உன்னதமான ஒத்துழைப்பிற்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இலங்கை வலுவான மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கு ஆதரவளிப்பதற்கான எமது கடமைப் பொறுப்பினை நாம் மீளஉறுதிப்படுத்துகின்றோம்''.